## 1

# கைக்கொள்வதற்கு வாக்குத்தத்தங்கள்

## (2 கொரிந்தியர் 1:12–2:4)

*"... உங்கள்மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே ..." (2:4).*

சமீபத்திய ஆண்டுகளில் பல நிறுவனங்களில் நடக்கும் மோசடிகள் மூலம், மக்கள்தொகையின் பரந்த பிரிவின் மத்தியில், சந்தேகம் இன்றி எல்லா நிறுவனங்கள் மற்றும் அவற்றின் நடத்துனர்களைப்பற்றியும், குற்றம்காணும் ஒரு நிலையைப் பங்களித்துள்ளனர். "பொதுஜன ஊழியர்" என்ற சொற்றொடர், பொதுஜனத் தொண்டு செய்தே இராதவர்கள் பற்றிய பரபரப்பான செய்திவரலாறுகளுக்குப் பின்பு ஒரு முரண்பாடான அர்த்தத்தை மேற்கொண்டுள்ளது. மோசடிகள், எல்லா பொது மற்றும் தனியார் நிறுவனங்களும் சுயத்திற்குச் சேவைசெய்தலினால் இயக்கப்படுகின்றன, அவற்றின் நடத்துனர்கள் தங்களை முன்னேற்றிக்கொண்டு பொதுமக்களை வஞ்சிப்பதென்ற ஒரே நோக்கம் கொண்டுள்ளனர் என்று கருத்துத் தெரிவிப்பதில்லை. துரதிஷ்டவசமாக, சந்தேகம் மற்றும் குற்றம் காணும்நிலை ஆகியவற்றிற்கு அவர்கள் காரணமாக இருந்திருப்பினும், ஒவ்வொரு நிறுவனமும் தனது சட்டப்பூர்வமான தன்மையைப் பொதுமக்களுக்கு செயல்விளக்கப்படுத்துவதை அது அவசியமாக்குகிறது.

மிகப்பரவலாக உள்ள குற்றம் காணும் நிலையானது சபை வாழ்விற்கு ஒரு காரணியாகிறது. நாம், நம்பகமான ஊழியம் எது என்று தீர்மானிப்பதற்கான உபதேச விஷயங்களை எதிர்கொள்வதோடு நின்றுவிடுவதில்லை. அல்லது நாம் ஊழியத்தின் சரியான மாதிரியைக் கண்டறிவதில் அக்கறை கொள்வதோடு நின்றுவிடுவதில்லை. சபையின் பல்வேறு ஊழியங்களில் பங்கேற்பவர்களின் ஒருமைப்பாட்டை/நேர்மையைச் செயல்விளக்கப்படுத்துதல் அவசியமாக உள்ளது. இன்றைய நாட்களின் குற்றம் காணும் நிலையானது, சபையின் ஒவ்வொரு முடிவு மற்றும் செயல்திட்டத்திலும் சுயமுன்னேற்றத்திற்கான அடையாளங்களைச் சோதித்து அறிவதற்கு கண்களையும் காதுகளையும் தந்துள்ளன.

தேவனுக்காகப் பேசுபவர்களாகவும் "புதுசிருஷ்டிகளாக"வும் (5:17) இருப்பதாக உரிமை கோருபவர்கள் வேறு எவரொருவரிலும் இருந்து மாறுபட்டிருப்பதில்லை என்பது பொதுவான விமர்சனமாக உள்ளது: கணக்கிடப்பட்ட மற்றும் உலகத்தர அளவையின் அடிப்படையிலேயே, கிறிஸ்தவ வாழ்வு மற்றும் ஊழியத்தில் ஒருவரின் இடம் ஆகியவை பற்றிய முக்கியமான முடிவுகள் மேற்

கொள்ளப்படுகின்றன. சில கிறிஸ்தவர்கள், ஒரு கம்பெனியில் அவர்கள் மேற்கொள்ளும் நிலைப்பாடு போன்றே, ஊழியம் செய்வதற்கும் ஒரு இடத்தைக் கண்டுபிடிக்கின்றனர்: தங்களுடைய சாதனைக்கு எந்தக் குழு உத்தமமாக இருக்கும் என்று கேட்பதின் மூலம் இதைச் செய்கின்றனர். உலகத்தில் உள்ள மற்றவர்களால் பயன்படுத்தப்படுகிற அதே தர அளவையைக் கொண்டே நாம் சபை நடத்துனர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். குற்றம் காண்பவரின் கண்ணோட்டத்தின்படி, ஊழியர் விற்பனைக்கென்று இருக்கிறார், அவர் தமது மாற்றமானது, தமது முன்னேற்றத்திற்கும் மதித்து ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கும் வழிநடத்தும் என்றால், ஒரு ஊழியத்தில் இருந்து இன்னொரு ஊழியத்திற்குத் திரும்ப எப்போதும் தயாராக இருக்கிறார்.

குற்றம் காண்பவர் எப்போதுமே சரியாக இருப்பதில்லை என்பது தெளிவு. நமது முடிவுகளை மேற்கொள்வதில் நாம் எப்போதுமே உலகத் தர அளவைகளைப் பயன்படுத்திக் கொண்டிருப்பது இல்லை. ஆனால் சபையின் ஊழியத்தையும் அதற்குள் நமது சொந்த இடத்தையும் நிலைநாட்ட, உலக நிர்ணயங்களைப் பயன்படுத்துமாறு நாம் அடிக்கடி சோதிக்கப்படுகிறோம். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் "எனது என்ற தலைமுறை"யானது, நமது சொந்த முன்னேற்றத்தை முதலில் கண்ணோக்குவதற்கான சோதனையை அளிக்கிறது. குற்றம் காண்பவர் சில வேளைகளில் சரியானவராகவே இருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை.

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபம், இன்றைய நாட்களில் பொதுவாக அளிக்கப்படுகிற விமர்சனங்களின் இவ்வகைகளுக்கு ஒரு பதில் நடபடிக்கையாக உள்ளது. பவுல் தாம் நிலைநாட்டிய சபையினாலேயே, தம்மைத் தற்காத்துக்கொள்ளும் நிலையில் வைக்கப்பட்டார் மற்றும் அவர்களின் குற்றச்சாட்டிற்குப் பதில்கூறுதலும் தமக்குள் கிறிஸ்து பேசுகிறார் என்பதற்கு நிரூபணத்தைத் தருதலும் (13:3) அவசியமாயிற்று என்பது மிகவும் கொடியதாகக் காணப்படுகிறது. நேர்மையுடன் செயல்படுதல் மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை, நாம் நேர்மையுடன் செயல்பட்டுள்ளோம் என்பதைப் பிறர் அறிவதும் அவசியம் என்பதால், அவர் அந்தக் குற்றச்சாட்டுகளுக்குக் கவனமாகப் பதிலுரைத்தார் என்பது இந்தப் புத்தகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க உண்மையாக உள்ளது (இ.வ. 1:13, 14; 13:6).

## செய்தியாளரே பிரச்சனையாக இருக்கிறார்

ஒரு நிருபத்தை எழுதத் தூண்டிய ஆதிக்கம் செலுத்தும் அக்கறையைப் பற்றி தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டுதல் என்பது பவுல் தமது நிருபத்தை எழுதுவதில் கடைப்பிடித்த பொதுவான நடைமுறையாக இருந்தது. அவரது நிருபங்கள் எப்போதுமே, குறிப்பான பிரச்சனைகளுக்குப் பதிலுரையாகவே எழுதப்பட்டன. ஆதிக்கம் செலுத்தும் இந்த அக்கறையென்பது வழக்கமாக, நன்றி செலுத்தும் (அல்லது ஆசீர்வதிக்கும்) பகுதிக்குப் பின்பு உடனடியாக உரைக்கப்பட்டது. 2 கொரிந்தியர் நிருபத்தில், இந்த ஆதிக்கம் செலுத்தும் அக்கறையானது 1:12-14ல் உள்ளது, இது இந்த நிருபத்திற்குத் தொனியை அமைக்கிறது. இவ்வசனங்கள் காண்பிக்கிறபடி, அப்போஸ்தலரின் நடக்கை என்பதே 2 கொரிந்தியர் நிருபத்தின் பிரச்சனையாக உள்ளது.எவ்வாறு "நாங்கள் உலகத்திலே ... நடந்தோமென்று" (1:12) தற்காத்துக் கொள்வதற்காகவே, பவுல்

*2 கொரிந்தியர் நிருபத்தை எழுதுகிறார். 1:12-14ன் தொனியானது, அவரது தனிப்பட்ட நடக்கை தாக்குதலின்கீழ் உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கிறது. அவர் தமது வாசகர்கள் "புரிந்துகொள்ள வேண்டும்" என்று விரும்புகிறார் (1:13).*

*பவுல், "ஒருவிஷயத்தில் நாங்கள் பெருமை பாராட்டுகிறோம்" (1:12;* NEB*) என்று கூறுகிறார். "பெருமை" என்பதற்குப் பவுலின் (kauchesis என்ற) வார்த்தை, சாதாரணமாக "தற்பெருமை" என்ற எதிர்மறை அர்த்தத்திலேயே தோன்றுகிறது. சாதாரணமாக இவ்வார்த்தை, தமது வேலையைக் குறித்து தேவனுடைய பங்குப்பணி [பற்றிய நன்றியுணர்வு] இன்றிப் பெருமையடித்துக்கொள்ளும் ஒருவர் என்ற கருத்தை தருகிறது (இ.வ. ரோமர் 3:27; 4:2). 2 கொரிந்தியர் நிருபத்தில், இவ்வார்த்தை ஒரு விசேஷித்த அர்த்தம் கொண்டுள்ளது, ஏனெனில் பவுலின் விரோதிகள் தங்கள் சொந்தக் கிரியைகள் நிமித்தம் பெருமையடித்துக்கொண்டு, ஒப்பீட்டில் அவர் ஒரு அற்பமான அப்போஸ்தலர் என்று கருத்துத் தெரிவித்துக்கொண்டிருந்தனர் (இ.வ. 5:12; 10:13, 17). அவர்களின் பெருமை பாராட்டுதல் மனித தர அளவையின் அடிப்படையில் இருந்துள்ளது.*

*இருப்பினும், ''கர்த்தருக்குள்'' இருத்தல் மற்றும் அதன் கடன்பட்ட தன்மையைத் தேவனுக்கு முன்பாக ஒப்புக்கொள்ளுதல் என்ற, ஏற்புடைய வகையிலான பெருமைபாராட்டுதல் (இ.வ 1 கொரிந்தியர் 1:31) ஒன்றுள்ளது. ''பெருமைபாராட்டுதல்'' என்பதற்கான (kauchesis, kauchema) என்ற வார்த்தைகள், ஒருவரின் ஊழியம்/வேலை பற்றி "பெருமையாக இருத்தல்" என்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், "ஆதலால் நான் தேவனுக்குரியவைகளைக்குறித்து இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மேன்மை பாராட்ட எனக்கு இடமுண்டு" என்று கூறுகிறார் (ரோமர் 15:17). 2 கொரிந்தியர் நிருபத்தில் அவர், தாம் "பெருமிதம் கொள்ளும்" செயல்களைத் திரும்ப நினைவு கூருவதன்மூலம், மற்றவர்களின் பெருமைபாராட்டுதல்களுக்கு அடிக்கடி பதில் அளிக்கிறார் (10:16; 12:1, 9). பவுலின் கூற்றுப்படி, ஒருவர் மற்றவர்களைக் குறித்து ''பெருமைபாராட்டலாம்.'' 7:4ன்படி அவர் தாம் நிலைநாட்டிய சபையினிமித்தம் "மாபெரும் பெருமிதம்" கொள்கிறார் (இ.வ. 9:2). மெய்யாகவே, பவுல் 1:12ல் தாம் எதைக்குறித்து "பெருமைபாராட்டுகிறேன்" என்கிறாரோ அதற்காக, அவரது வாசகர்கள் அவரைக் குறித்து "பெருமை" பாராட்டக் கூடும். இந்த உண்மை, கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர், தனித்தன்மைவாய்ந்த கிறிஸ்தவராயிருக்கும் நடத்தையின் பாணியில் பெருமை கொள்ளக்கூடும் என்று கருத்துத் தெரிவிக்கிறது. 2 கொரிந்தியர் நிருபத்தின் பெரும்பகுதியானது, பவுலைக் கிறிஸ்துவுக்குச் சட்டப்பூர்வமான ஊழியக்காரர் என்று "பாராட்டும்" (6:4) குறிப்பிட்ட அவரது விபரங்கள் தொகுக்கப்பட்டதாக உள்ளது.*

*கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபம், பவுலிடமிருந்து அசாதாரணமான அளவுக்குத் தன்வரலாற்று விபரங்களாலும், அதில் பெரும்பான்மையானது சுய தற்காப்பில் செய்யப்பட்ட பெருமைபாராட்டும் வடிவமாகவும் பண்புபடுத்தப்பட்டுள்ளது (இ.வ. 6:1-10; 11:23-33). எவ்வகையான பெருமைபாராட்டுதலுக்கும் சங்கடம் அடைதல் என்பதே நமது இயல்பான பதில் செயலாக உள்ளது. நமது நம்பகத்தன்மையை நிலைநாட்டும் விபரங்களைத் திரும்ப நினைவுக்குக் கொண்டுவருதலுக்கு*

ஒரு இடம் உள்ளது என்று பவுலின் அனுபவம் கருத்துத் தெரிவிக்கிறது. நமது சொந்த அனுபவங்களைப்பற்றி தனிப்பட்டவகையில் பேசவும் மற்றவர்கள் தங்கள் சொந்தவரலாற்றை மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவருதலைக் கவனிக்கவும் நாம் மனவிருப்பமின்றி இருக்கிறோம். ஆனால் பவுலின் “மேன்மை பாராட்டுதல்” என்பது, சிலவேளைகளில் நாம் சோம்பேறியாகிவிடவில்லை மற்றும் நமது ஊழியம்குறித்துக் கவலையற்றவர்கள் ஆகிவிடவில்லை என்பதை நாம் செயல்விளக்கப்படுத்தவேண்டும் என்பதற்கான ஒரு நினைவூட்டுதலாக உள்ளது. இது, நமது ஊழியத்தில் நாம் “பெருமிதம் அடைகிறோம்” என்று நாம் காண்பிக்கும் உறுதியான செய்கைகளாக உள்ளது.

இன்றைய நாட்களில் சாதாரணமாகக் கிறிஸ்தவர் பதில்கூறியாக வேண்டிய அதே குற்றச்சாட்டிற்குப் பவுல் பதில் அளிக்க வேண்டியவராக இருக்கிறார்: அதாவது, “உலக” சிந்தனைகள் அவரது நடக்கையைத் தீர் மானிக்கின்றன. அவர், தாம் “மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே [*en sophia sarkike*]” *(1:12)* செயல்பட்டதாகக் கூறப்பட்டதை மறுக்கிறார். “... நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ?” என்று கேட்கிறார் *(1:17)*. இந்தத் தற்காப்புக்குப் பின்னால், அவர், ஆவியானவரின் வரத்தினால் வாழ்கிற “புதுச்சிருஷ்டி” போல் *(5:17)* இராமல், “மாம்சத்தின்படி [*kata sarka*]” (5:16) பேசுகிறார் மற்றும் செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதாவது, பவுலின் வாழ்வை மாம்சம் *(1:12, 17; 5:16* ஆகியவற்றில் *sarx*) ஆளுகை செய்கிறது என்று சிலர் கூறுகின்றனர். அவரது எதிராளிகள், அவர் மற்ற எவரிலுமிருந்து வேறுபட்டிருப்பதில்லை என்றும், அவர் எவரொருவரையும் போலவே கணக்கிட்டு சுயத்தைச் சேவிப்பவராக இருக்கிறார் என்றும் உரிமை கோரினர்.

அந்தப் பின்னணிக்கு எதிராக, ஒரு ஆவிக்குரிய மனிதராக நடந்துகொண்டதாகவும், அவர் “பரிசுத்தத்தோடும் தேவபக்தியின் உண்மை யோடும்” நடந்துகொண்டதாகப் பவுல் உரிமைகோரினார். இந்தப் பிரச்சனை முக்கியமானதாக இருந்தது என்பது உறுதி, ஏனெனில் *2:17*ல் பவுல், தாம் தமது வாழ்வை உண்மையுடன் நடத்தியதாக வலியுறுத்துகிறார். பவுல் தமது ஊழியத்தில் “தந்திரம்” அல்லது “சூழ்ச்சி” உள்ளவர் என்ற குற்றச்சாட்டிற்குத் தப்பியிருக்கவில்லை. இவ்வாறாக அவர், தமது நடக்கையில் கிறிஸ்து ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியிருந்ததாக உரிமைகோருகிறார் *(1:12-14)*.

குற்றம் காண்பவரின் நெருங்கிய சரிபார்த்தலுக்கு எவரொருவரும் தப்புவதில்லை என்பதைப் பவுலின் தற்காப்பு வாதம், நமக்கு நினைவூட்டுகிறது. சிலவேளைகளில், சபை நடத்துனர்களும் பல வகையான ஊழியங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், கிறிஸ்தவர்களாக இருப்பதில்லை என்பதற்கான அடையாளங்களுக்காக, அவர்கள் நடக்கையில், உற்றுநோக்கப்படுவார்கள். நாம் “புது சிருஷ்டியாக” இருக்கிறோம் என்ற உரிமைகோருதலை ஏற்படுத்துவதற்கு, நம்மை நாம் ஒப்புவித்துள்ள ஊழியத்தில் ஏதோசில விஷயம் “புதியதாக” உள்ளது என்று செயல்விளக்கப்படுத்துமாறு நாம் அறைகூவல் விடப்பட்டிருக்கிறோம் என்பதே, நாம் செலுத்தும் விலையாக உள்ளது.

## கிறிஸ்தவர்களும் அவர்களின் தீர்மானங்களும்

தவறான புரிந்துகொள்ளுதல்களுக்கு வழிநடத்தும்படி அடிக்கடி நம் மத்தி

யில் நடைபெறுவது போன்ற சூழ்நிலைகளே பவுலின் உண்மைத்தன்மை பற்றிய சந்தேகங்களுக்கு வழிநடத்திய நிகழ்ச்சியாக இருந்தது. ஒருமுறை பவுல், தமது மக்கெதோனியப் பயணத்தின்போது (1:15, 16), கொரிந்தியர்களுடன் நீண்ட காலம், ஒருவேளை ஒரு குளிர்காலம் முழுவதும் செலவிடுவதாக வாக்களித்திருந் தார் (1 கொரிந்தியர் 16:5, 6). 1:15, 23ன்படி, பவுலின் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. திட்டங்களில் ஏற்பட்ட இந்த மாற்றம், அவர் தமது முடிவுகளை மேற்கொள்வதில் "நிச்சயமற்றவராக" மற்றும் "உலகப்பிரகாரமானவராக" இருந்தார் என்ற குற்றச்சாட்டிற்கு வழிநடத் திற்று. அப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் தவறான புரிந்துகொள்ளுதல் கள் வளரக்கூடும் என்பதை நாம் கற்பனை செய்ய முடிகிறது: "அவர் தமது உறுதிப்பாடுகளைக் காத்துக்கொள்வதில்லை"; "நீங்கள் அவர்மீது நம்பிக்கை வைக்க முடியாது, ஏனென்றால் அவரது வார்த்தைகள் நல்லவையல்ல. அவர் தமக்கு அனுகூலமாயிருக்கும் என்றால், எவ்வித அறிவிப்பும் இன்றியே திட்டங்களை மாற்றிக்கொள்வார்." இவைகள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களில் ஒருவருக்கு எதிரான தீவிரமான குற்றச்சாட்டுகளாக உள்ளன.

எவரொருவரும், தமது பற்றுறுதியும் உண்மைத் தன்மையும் சந்தேகத்தில் இருக்கும்போது, கிறிஸ்துவுக்கு வெற்றிகரமாக ஊழியம் செய்ய இயலாது. இதன்விளைவாக, 1:18-20ல் பவுல், தமது வார்த்தை நம்புதற்குரியதாக இருந்துள்ளதைக் காண்பிக்கிறார். "நாங்கள் உங்களுக்குச் சொன்னவார்த்தை ஆம் அல்ல என்று இருக்கவில்லை ..." (1:18). பின்பு அவர், கிறிஸ்தவ அறிவித்தலானது ஒருக்காலும் தெளிவற்ற "ஆம் மற்றும் இல்லை" என்று இருந்ததில்லை என்பதை நினைவுக்குக் கொண்டு வருகிறார். ஆராதனை ஊழியம் ஒவ்வொன்றிலும், சபையானது "ஆமென்" என்று கூறும்போது, இயேசு, தேவனின் "ஆம்" என்பவராக இருக்கிறார் என்பதை அது நினைவுபடுத்திக்கொள்கிறது. பவுல் வேதவாக்கியம் யாவற்றையும் தேவனுடைய வாக்குத்தத்தம் என்ற தலைப்பின்கீழ் தொகுத்தார். இயேசுவுக்குள் சபையானது, தேவனுடைய வார்த்தை "வெறுமை யாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து" முடிப்பதாக உள்ளது என்பதை அறிகிறது (ஏசாயா 55:11).

தேவன் தமது வார்த்தையில் கொண்டுள்ள உண்மைத்தன்மை மீதான சிறு கட்டுரையானது (1:20), முதல் பார்வையில், பவுலின் நடத்தைக்கான அவரது தற்காப்பு வாதத்திற்குப் புறம்பே இருப்பதாகக் காணப்படுகிறது. ஆனால் பவுல், தமது நடக்கையானது, தமது வார்த்தைகளைக் காத்துக்கொண்டிருக்கிற தேவனுக் குச் சீர்பொருத்தமானதாக உள்ளது என்று செயல்விளக்கப்படுத்த வேண்டியது வலிவார்ந்த வகையில் முக்கியமானதாக இருக்கிறது. தேவனுடைய இயல்புக்கும் நம்பகத்தன்மை வாய்ந்த ஊழியரின் பண்புக்கும் இடையில் ஒரு தொடர்பு உள்ளது.

கிறிஸ்தவரின் அடையாளம் என்னவாக உள்ளது? பவுலின்கூற்றுப்படி, ஒருவருடைய வார்த்தையின் நம்பகத்தன்மையும் மற்றவர்களுக்கான உறுதிப்பாட்டைக் காத்துக்கொள்வதும் ஒரு பரீட்சையாக உள்ளது. கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர், இயேசுகிறிஸ்துவிற்குள் தேவனு டைய வார்த்தைக்கு அவருடைய உண்மைத்தன்மையை அறிவித்தலுடன் நின்றுவிடுவதில்லை. மற்றவர்களுக்கு மெய்ப்பற்றுடனான வாழ்வுநடையின் உருவகமாக இருத்தலும் கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது.

நம்பகத்தன்மைக்கான பரீட்சையானது நமது கலாச்சாரத்தில் பாராட்டப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதில்லை, ஏனெனில் உறுதிப்பாடுகளைக் காத்துக்கொள்ளுதல் என்பது தாழ்ந்த முன்னுரிமைக்குரிய விஷயமாக உள்ளது. "நமது தெரிவுகளைத் திறமையாக வைத்துக்கொள்வோம்" என்பதும் எல்லையற்ற வகையில் தழுவியமைத்துக் கொள்ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதுமே நமது யுகத்தின் கொள்கைப் பிரச்சாரம் நமக்குக் கூறுகிற விஷயமாக உள்ளது. இவ்வாறாக, "நமது தெரிவுகளைத் திறமையாக வைத்துக்கொள்ளுதல்" என்பது, நமது சுய அனுகூலத்திற்கானதாக இல்லாத உறுதிப்பாடுகளை மேற்கொள்ள மறுத்தலை உள்ளடக்குகிறது. நமது யுகத்தின் கொள்கைப் பிரச்சாரமானது, ஒருவர்/ஒருத்தி தனது வாழ்க்கைத் துணைக்கு எல்லையற்ற வகையில் தன்னை ஒப்புக்கொடுத்திருத்தல்கூட சாத்தியமற்றது என்று கருத்துத் தெரிவிக்கிறது, ஏனெனில் அப்படியான ஒரு ஒப்புக்கொடுத்தல், தனிப்பட்ட சுதந்திரத்தில் இடையூறு செய்கிறது. பக்க கோடுகளில்/எல்லைகளில் நின்றுகொண்டு, நம்மை வளப்படுத்தும் தெரிவுகளைப் பின்பற்ற எப்போதுமே தயாராக இருக்கும்படி வலியுறுத்தும் ஒரு கலாச்சாரத்தில் நாம் இருக்கிறோம்.

இந்த "உலகப்பிரகாரமான" கண்ணோட்டம் சபைக்குத் தெளிவான சோதனையாக இருந்துள்ளது. பிரச்சனைகள் கொண்டுள்ள ஒரு சபைக்குப் பற்றுறுதியுடன் நிலைத்திருத்தல் கடினமாக உள்ளது. உறுதிப்பாட்டின் வேதனையைப் பகிர்ந்துகொள்வதைத் தேர்ந்துகொள்பவர்கள், சமூகத்தின் பிரச்சனைகள் அந்த சமூகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள நிலையில் அந்த சமூகத்திற்கு உண்மை உள்ளவர்களாக நிலைத்திருக்க, மனோதத்துவரீதியாகவும் பௌதீகரீதியாகவும் உயர்ந்த விலையைச் செலுத்துகின்றனர். உதாரணமாக, அயலகத்தின் அல்லது ஒரு நகரத்தின் மாறிக்கொண்டிருக்கும் பண்பு, சபையை ஊறுபடக்கூடியதாக்குகிறது. சபையானது தனது கடந்தகாலத்தில் மேற்கொண்ட தவறான முடிவுகளினிமித்தம் துன்புறலாம். பலவீனமான நடத்துவத்துவத்தைக் காட்சிப்படுத்துவதாகக் காணப்படும் முடிவுகளின் மாதிரி அடிக்கடி இருக்கக் கண்டு நாம் அதிருப்தி அடைந்திருப்பதாகவும் காணப்படலாம். "மனிதக் கண்ணோட்டக் கருத்தில்" இருந்து, "நமது தெரிவுகளைத் திறமையாக வைத்துக்கொள்ளுதல்" மற்றும் ஒரு சமூகத்தின் பிரச்சனைகளுடன் ஈடுபாடு கொண்டிருக்க மறுத்தல் என்பது ஏற்புடைய பதில்செயலாக உள்ளது.

மற்றவர்கள் பவுலை, நிச்சயமற்றவராக இருந்தார் என்று குற்றம்சாட்டியபோது, அவர் தமது நடக்கையானது சுவிசேஷத்துடன் சீர்பொருந்தியிருப்பதாக வலியுறுத்துகிறார். தமது வாக்குத்தத்தங்களுக்கு "ஆம்" என்று கூறியுள்ள தேவனிடத்தில் இருந்து பவுல் தமது தனிப்பட்ட உறுதிப்பாடுகளைத் தீவிரமானவையாக எடுத்துக்கொள்ளக் கற்றிருந்தார். சூழ்நிலைகள் அவரது திட்டங்களில் மாறுதலைக் கேட்டிருந்தாலும், அவரது நடமாட்டங்கள் சொந்த நன்மைக்கானவற்றினால் கட்டளை இடப்பட்டிருக்கவில்லை. சுவிசேஷ வரலாற்றினால் வடிவமைக்கப்பட்ட தனிப்பட்ட பண்பு ஒன்று பவுலுக்கு இருந்தது.

பவுலின் தற்காப்பு வாதம், சரியான விஷயங்களைக் கூறுவது மாத்திரம் நம்பகத்தன்மையுள்ள சீஷத்துவமாகிவிடாது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அது நமது செய்தியுடன் சீர்பொருத்தமாக உள்ள ஒரு நடக்கையையும் உள்ளடக்குகிறது. சொரென் கியர்கெக்கார்டு என்பவர், பைத்தியக்கார விடுதி

யில் இருந்து தப்பித்து வந்து, அடுத்த நகரத்தில் மக்களால் உண்மையிலேயே பைத்தியக்காரர்தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு மறுபடியும் அந்த நிறுவனத்திற்கே திருப்பி அனுப்பப்பட்ட ஒரு மனிதனைப் பற்றிக் கூறினார். அந்தப் பைத்தியக்காரர், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில உண்மைகளை உரக்கக் கூறுவதினால், அதைக் கேட்பவர்கள் யாவருக்கும், தன்னை மனத்தெளிவுள்ளவன் என்று நிரூபிக்கும் என்று நினைத்து அதினால் தனது பைத்தியக்காரத்தனத்தை மறைக்க முடிவுசெய்தான். அவன் தெருவில் நடந்துசென்று, கடந்து சென்ற ஒவ்வொருவரிடத்திலும், "பூமி உருண்டையாக உள்ளது. பூமி உருண்டையாக உள்ளது" என்று கூறினான். அவன் [பைத்தியக் காரன் என்று] உணர்ந்தறியப்பட்டு, பைத்தியக்கார விடுதிக்குத் திருப்பி அனுப்பப்பட்டான் என்று கூறத்தேவையில்லை. இந்தக்கதையின் சரித்திரக்காரர், உண்மையைக் கூறுதல் மட்டும் போதுமானதல்ல என்று கருத்துத் தெரிவித்தார். சத்தியத்தினால் செயல்விளைவு ஏற்பட்டிராத வாழ்வைக் கொண்டுள்ளவரின் வாயில் சத்தியம் வருதல் என்பது அறிவில்லாமையாக உள்ளது.[1]

உண்மையான கிறிஸ்தவர் வரலாற்றினால் வடிவமைக்கப்பட்டிருக்கிறார். நாம் நம்மையல்ல ஆனால் கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறோம் என்பது உண்மை யாக இருக்கையில், நமது அறிவித்தல் மற்றும் போதனையில் ஒரு "நான்" இருக்கிறது. 2 கொரிந்தியர் நிருபத்தில் "நான்" என்ற வார்த்தை திரும்ப திரும்ப வருதலானது, சுவிசேஷத்தின் ஊழியர் நம்பியிணங்கக் கூடியவராக இருந்தால் மாத்திரமே சுவிசேஷம் நம்பி ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக உள்ளது.

பவுல் "மாம்சத்திற்குரிய" மனிதராக (நேரடி அர்த்தத்தில், "மாம்சத்தின் மனிதர்," 1:12) இருக்கிறார் என்ற குற்றச்சாட்டிற்கு எதிராகப் பவுல், தமது வாசகர்களுக்கு, தமது வார்த்தையைக் காத்துக்கொண்டுள்ள தேவன், தமக்கு [பவுலுக்கு] ஊழியத்தை நியமித்தார் என்பதையும் (1:21) சபையாருக்கு ஆவியானவரை ஒரு "அச்சாரமாக" கொடுத்திருக்கிறார் என்பதையும் (1:22; cf. 5:5; எபேசியர் 1:14) நினைவூட்டுகிறார். ஆவியானவர் மூலமாக சபையில் ஏற்கனவே பிரசன்னமாகியுள்ள தேவனுடைய அச்சாரமானது, அவரது நம்பகத்தன்மைக்கு நினைவூட்டுதலாக உள்ளது. பவுல் தேவனுடைய உண்மைத் தன்மைக்குச் சீர்பொருத்தமான வகையில் நடந்துகொள்கிறார்.

## "உங்களுக்காக விசேஷித்தவகையில் நான் கொண்டுள்ள அன்பு"

பவுல் தமது வார்த்தையைக் காத்துக்கொள்ளாது போய், இவ்வாறு தமது நோக்கத்தை பிறரின் ஆய்வுக்குத் திறந்து வைத்தது ஏன்? இதற்கு, 1:23ல் அவர், "மேலும் நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்துபட்டணத் திற்கு வராதிருக்கிறேனென்று ..." கூறும்போது, ஒரு தெளிவான பதிலைக் கொடுக்கிறார். பின்பு அவர் கொரிந்தியர்களுடன் தமக்குள்ள, வேறு எவ்விடத்தி லும் பதிவுசெய்யப்பட்டிராத, தீவிரமானதொரு உறவை விவரிக்கிறார். 1:3-2:13 வரையிலான வசனங்கள் செயல்விளக்கப்படுத்துகிறபடி, கொரிந்து சபையானது பவுலுக்கு மிகுந்த துக்கம் ஏற்படக் காரணமாயிருந்தது. ஒருமுறை பவுல், மாபெரும் வேதனைக்குக் காரணமான சிலரின் வெளிப்படையான கலகத்தைக்

*(2:5) கையாள்வதற்கு வேதனைநிறைந்த பார்வையிடுதல் ஒன்றை மேற் கொண்டார் (2:1). பிற்பாடு அவர், "மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய்" ஒரு நிருபத்தை எழுதினார் (2:4). பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில், பவுல் துரோவாவுக்குச் சென்றார், அங்கு தீத்துவைச் சந்திக்கலாம் என்று நம்பியிருந்தார். வெற்றிகரமான ஊழிய உழைப்பின் மத்தியில் கூட ("கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில்"), பவுல் அங்கிருந்து "புறப்பட்டு" மக்கெதோனியாவுக்குச் சென்றார் (2:13). பவுலின் அக்கறையின் விரிவளவு 2:13ல் உரைக்கப்படுகிறது, அங்கு அவர், "நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே, என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது … ." கீழ்ப்படியாமையுள்ள ஒரு சபைக்காக அவர் வெற்றிகரமான ஒரு ஊழியத்தை இடர்ப்படுத்தினர்!*

*மனித கண்ணோட்டக் கருத்தின்படி, கலகக்கார சபையினிடத்தில் பவுல் உணர்வுப்பூர்வ ஈடுபாட்டுடன் நிலைத்திருந்ததில், அவரது மதிப்பீடுகள், வினோதமான வகையில் புறம்பானவைகளாகக் காணப்படுகின்றன. விரோதமனப்பான்மையும் நன்றியற்ற தன்மையும் கொண்ட ஒரு சபையைக் கையாள்வதற்காக அவர் மாபெரும் வெற்றிக்கான சாத்தியக்கூறு ஒன்றை விட்டுக் கொடுக்க மனவிருப்பமாக இருந்ததை நம்மால் சுலபமாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால் பிற்பாடு பவுல் (11:28)ல், "எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை"யினால் நெருக்கப்பட்டதாகக் கூறினார். தற்கால மொழி நடையில் நாம், சபைக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்தல் என்பதே பவுலுக்குக் கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது என்று நாம் கூறலாம்.*

*பவுலினுடைய, "எல்லா சபைகளையும் குறித்த கவலை" மற்றும் நிலையான மன அழுத்தம் ஆகியவை "மனிதக் கண்ணோட்டக் கருத்திற்கு" எதிராக ஓடுகிற சுயநலமற்ற தன்மையைச் சுட்டிக்காண்பிக்கின்றன. அவரது செயல்பாடுகள், மற்றவர்கள்மீதான கவலையினாலேயே அவர் செயல்பட்டார் என்பதைச் செயல்விளக்கப்படுத்துகின்றன. "உங்களைத் தப்பவிடும்படிக்கே" என்று அவர் கூறுகிறார் (1:23). கீழ்ப்படிதல் இல்லாத இந்த சபையின்மீது கொண்டிருந்த தமது "அன்பை" காண்பிக்கவே செயல்பட்டதாக அவர் கூறுவது குறிப்பிடத்தக்கது (2:4). குறிப்பிட்ட இந்த சபையானது அன்புகூரப்படச் சுலபமானதாக இருக்க வில்லை.*

*மன இறுக்கத்தைத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலைகளின் அவசியம் பற்றி நாம் பேசுகிறோம். சிலர், ஊழியர்களும் மற்றவர்களும் சபையின் பிரச்சனையைத் தங்களுடன் இல்லத்திற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று கூறுகின்றனர். ஆனால் மற்றவர்களினிமித்தம் வசதிக்குறைவினால் துன்புற ஆயத்தமாக இருத்தல் என்பது கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது. இது நமக்கு வசதி யற்ற நேரங்களில் வரும் தொலைபேசி அழைப்புகளையும், நமது சாதாரணத் திட்டங்களில் இடையூறு செய்யும் கூட்டங்களையும் உள்ளடக்கலாம். இது மற்ற வர்களுக்காக நம்மையே வெறுமையாக்குதல் என்பதை உள்ளடக்கியிருக்கலாம். "தொந்தரவு செய்யாதீர்!" என்ற அறிவிப்பை, தான் விரும்புகிற போதெல்லாம் தமது கதவுக்கு வெளியே தொங்கவிடும் மேலாளர், நமது ஊழியத்திற்கு மாதிரி யாக இருப்பதில்லை; பலருக்காகத் தமது ஜீவனையே கொடுத்த, "பிறருக்கான மனிதரே" நமது மாதிரியாக இருக்கிறார்.*

*மற்றவர்களுக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்த ஒருவரே, பவுலின் மாதிரி*

*யாக இருந்தார். சபையுடன் சேர்ந்து துக்கத்தை அனுபவித்தலினால், அவர் தமது வாழ்வின்மீது சிலுவையின் செயல்தாக்கத்தைச் செயல்விளக்கப்படுத்தினார். "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்" (5:14). இந்த உண்மை, சுயத்திற்காக வாழுதலின் முடிவை அர்த்தப்படுத்திற்று (5:15).*

## *முடிவுரை*

*கிறிஸ்தவரின் அடையாளம் என்னவாக உள்ளது? பவுலுக்கு அது, தாம் வரலாற்றினால் உருவமைக்கப்பட்டிருந்தார் என்று காண்பிக்கிற வாழ்வாக உள்ளது. அவர், "பதிவேட்டைக் கண்ணோக்குங்கள், அது பணத்திற்காக வணிகம் செய்பவரின் பதிவேடாக உள்ளதா என்று பாருங்கள்" என்று கூறுவதாகக் காணப்படுகிறார். "எனது தனிப்பட்ட வரலாற்றைப் பாருங்கள், அது இந்த வரலாற்றுடன் ஒத்துப்போகிறதா என்று பாருங்கள்" என்று அவர் கூறுவதுபோல் தெரிகிறது. இந்தப் பதிலுரையானது, கிறிஸ்தவரின் நிறைவான அடையாளமாக உள்ளது.*

*நாம் நமது சொந்த ஊழியங்களில், நாம் குறிப்பிட்டாக வேண்டிய ஒரு பதிவேட்டைத் தொகுத்துக்கொண்டிருக்கிறோம், ஏனெனில் இந்தப் பதிவேடு நமது உறுதிப்பாட்டிற்குச் சாட்சியாக உள்ளது. செய்தியாளரும் செய்தியுமே பிரச்சனையாக உள்ளன[ர்] என்றால், செய்தியாளரின் நடக்கையானது, அவர் தாம் அறிவிக்கும் செய்தியால் வடிவமைக்கப் பட்டிருக்கிறாரா என்பதைக் காண்பிக்கும்.*

---

குறிப்பு

[1]Sören Kierkegaard, *Concluding Unscientific Postscript,* trans. David Swenson and Walter Lowrie (Princeton: Princeton University Press, 1941), 159; quoted in Fred Craddock, *Overhearing the Gospel* (Nashville: Abingdon, 1978), 50.